# ஆத்ம ஜோதி



"பாரோங்கும் வழியருளும் சிவமான
பரகுருநின் பதங்கள் போற்றி"

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்

| சோதி 7 | மன்மதஞு ஆவணி 1-ங்உ (17-8-55) | சுடர் 10 |
|---|---|---|


## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | சிவானந்த தோத்திரம் | 289 |
| 2 | இரு விண்ணப்பங்கள் | 290 |
| 3 | இந்து சமுதாயம் ஒற்றுமைப்பட வேண்டும் | 291 |
| 4 | இந்துக்கள் ஒன்றுபட்டு நிற்க | 295 |
| 5 | பிளவுபடாது நாட்டைக் காப்போம் | 299 |
| 6 | உலப்பிலா ஆனந்தம் | 301 |
| 7 | ஸ்ரீ சிவானந்த வணக்கம் | 303 |
| 8 | திருமுறைக் காட்சிகள் | 304 |
| 9 | சிவானந்தத் தலைவன் | 308 |
| 10 | ஜபயோகம் | 309 |
| 11 | [illegible] | 311 |
| 12 | நித்திய வழிபாட்டுமுறை | 313 |
| 13 | ஜகத்குரு சிவானந்தர் தோத்திர பஞ்சகம் | 317 |
| 14 | செய்தித் திரட்டு | 317 |
| 15 | BIRTHDAY MESSAGE | Cover Third Page |



## ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75. வருட சந்தா ரூ. 3. தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்

8ப, டீல் பிளேஸ், கொள்ளுப்பிட்டி, கொழும்பு

பதிப்பாசிரியர்:- நா. முத்தையா

ஆத்ம ஜோதி நிலையம் நாவலப்பிட்டி [சிலோன்]


# சிவானந்த தோத்திரம்.

*அருணாசல பாண்டியன்*

அண்ணலே எனதுள் ஆருயிர்க் கமுதே
அன்பதே வடிவமாம் அரசே
மண்ணுல கதிலே வாழ்ஞெளித் தெய்வ
வாழ்வமைத் திடுமுயர் வாழ்வே
எண்ணெணுத் துயரில் இடர்ப்படு மெனது
விண்ணப்பம் என்றுகொண் டருளித்
தண்ணருள் புரிக தவசிவா னந்த
தத்துவா காரசற் குருவே

சற்குரு வேயென் சத்தியப் பொருளே
சாற்றினேன் முன்னரென் குறைகள்
பற்பல குறையில் வறுமையும் நோயும்
பழுமிகும் குடும்ப வெந்துயரும்
மற்பிடித் தாட்டிப் போரிடும் வழக்கால்
மதிமருண் டுளையடைந் தனனே
கற்பகத் தெய்வ தவசிவா னந்தா
கண்டிரங் கிடுதல் வேண்டாவோ

வேண்டுதல் வேண்டா ததுவுமற் றுலகி
வெம்மை தீர்த்திட அருளுருவாய்
தூண்டிடா விளக்காய் சுயஞ்சுடர் மயமாய்
துலங்கிடும் தெய்வதத் துணையே
யாண்டிடா வகைக தருள்செய்யம் வடலூர்
வள்ளல்போல் வையமேல் திகழும்
ஆண்டகாய் சுத்த தவசிவா னந்தா
அடியனுக் கருளலுன் கடனே

கடனதும் உணராக் கலதியேன் பள்ளிக்
கணக்கிலே நாட்கணக் கெண்ணி
திடமிலா தந்தோ ஆண்டெலாம் துன்பத்
திடரிலே இடரிடும் சிறியேன்
படமுடியா தென்றனை யடைந் தணைந்தால்
பராமுகம் படைத்தலும் அழகோ
நடமிடும் தெய்வ தவசிவா னந்த
நாதனே! அருளுக விரைந்தே.

# இரு விண்ணப்பங்கள்

## எனக்காக ஒன்று

எம்பெருமானே! உன்னிடம் எனது பிரார்த்தனை இதுவே
என் இதயத்தில் வறுமையின் வேரை வெட்டுவாயாக
என்இன்ப துன்பங்களை எளிதில் தாங்கச்சக்தி அருள்வாயாக [யாக
எனது அன்பு சேவையிலே கனியும்படி செய்யும் ஆற்றல் அருள்வா
தீனர்கள் என்தமரல்லர்என் றுஒருகாலும் புறக்கணியாவண்ணமும்
ஆணவமுள்ள வலிமையின்முன்னே தலைவணங்கிடா வண்ணமும்,
எனக்கு ஆற்றல் அருள்வாயாக.
உன்திருவுளக் குறிப்பறிந்து என் வலிமையை எல்லாம்
உனக்கு நிவேதிக்க அருள்புரிவாயாக.

## எனது நாட்டினர்க்காக ஒன்று

எங்கு மனம் பயமற்று விளங்குகிறதோ,
எங்கே தலை கம்பீரமாய் நிமிர்கிறதோ,
எங்கு அறிவு சுதந்தரத்துடன் பொலிகிறதோ,
எங்கு குறுகிய சாதிமதப் பிளவுகளால்
உலகம் உடையாமல் உருப்பெற்றிருக்கிறதோ,
எங்கு உண்மையின் ஆழத்திலின்று
சொற்கள் உதயமாகின்றனவோ,
எங்கே தளரா முயற்சி பரிபூரணத்தை
நோக்கிக் கைகளைப் பரப்புகிறதோ,
எங்கு பகுத்தறிவெனும் தெளிந்த ஆறு
மாண்டொழிந்த பழக்கங்களான
பயங்கரப்பாலை மணலில் பாயாது மீள்கிறதோ,
எங்கே விரிந்த சிந்தனையிலும் செயலிலும் எனது உள்ளத்தை
நினது அருள் இழுத்துச் செல்கின்றதோ,
அந்தச் சுதந்திர சுவர்க்கத்தில்,
என் அப்பனே, எனது நாடு விழித்தெழுவதாக,

—*இரவீந்திரநாத தாகூர்*

*(தமிழாக்கம்: வி. ஆர். எம். செட்டியார்)*



# இந்து சமுதாயம் ஒற்றுமைப் படவேண்டும்.

*(ஆசிரியர்)*

எம்மதமும் சம்மதமென்பதே எமது இலட்சியம். எல்லா மதங்களிலும், உண்மையும் அன்பும் உயிர்களுக்கு உய்யு நெறிகாட்டும் சக்தியும் உள்ளனவென்பதே எமது கொள்கை. மக்கள் சகலரும் தத்தம் மதபோதனைகளைத் தமது வாழ்வில் சாதனையாகக் கொண்டால், தாமும் நல்வாழ்வு வாழ்ந்து தரணியையும் வாழச்செய்ய முடியுமென்பது எமது அசைவற்ற நம்பிக்கை, இவையெல்லாம், பல ஆண்டுகளாக "ஆத்ம ஜோதி" வாசகர்களும் ஏனையோரும் நன்கறிந்த விஷயங்களாகும்.

ஆனால், உண்மையில் மதம் வேறு, மதவெறி வேருகும். மதவெறியானது அறிவிலியின் அன்பும் சீவகாருண்யமுமற்ற உள்ளத்தில் தோன்றும் ஒரு பித்தலாட்டம்; அது ஓர்வித தொற்றுநோயுமாகும். மனிதனிடத்து மறைந்துகிடக்கும் விலங்குக் குணத்தை மேலிட்டெழத் தூண்டும் விஷக்கிருமி அதில் அடங்கியுள்ளது. மதவெறி பிடித்தவன் பிறமதத்தினரின் உள்ளத்தைப் புண்படுத்துவதோடு, தன் சொந்த மதத்தின் மகிமைக்கும், அதை நிறுவிய மகானின் பெருமைக்கும் வசையைத் தேடுகிருன். இதை அவன் உணர்வதில்லை. மதவெறி பரவினல், ஒரு நாட்டில் வாழும் வெவ்வேறு மதத்தினர்க்கிடையே நிலவும் சகிப்புத்தன்மையும் சமரச மனப்பான்மையும் குறையத் தொடங்குகின்றது; சமுதாய வாழ்வின் சீரான நிலைக்கு வேண்டிய சகோதர நேயமும் ஒத்துழைப்பும் மறைகின்றன; இறுதியில் நாட்டின் அமைதிக்கே பங்கம் வந்துவிடுகின்றது.

தென்னிந்தியாவிலிருந்து வெளியாகிய ஓர் நூலில் அடங்கியுள்ள அசம்பாவிதமான, உணர்ச்சியுள்ள மக்களுக்கு ஆத்திரத்தை விளைக்கக்கூடிய, வசனங்களே மேலே தந்துள்ள குறிப்பை வரையும்படி எம்மைத் தூண்டியுள்ளன. காலநிர்ணயக் குண்டு [Time bomb] போட்டு, இந்து மதத்தை இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்போவதாகத் தம்பட்டம் அடிக்கும் இந்த நூலிலிருந்து ஒரு வசனத்தை மாத்திரம் கீழே தருகின்ருேம்:—

"நமது உள்ளக் கிடக்கையை ஒளிவு மறைவு இன்றி வெளியிடவேண்டுமானல். இந்து புராணங்களும் இந்து மதமுமே இந்நாட்டிலிருந்து மறையவேண்டும், அதுவே எத்துணைவிரைவிலோ அத்துணை வரவேற்கத்தக்கது என்று கருதுகின்றோம்," நூலின் பெயர் "திராவிட இயக்கங்களும் சுத்தோலிக்கரும்,"

மேலே தரப்பட்டுள்ள வசனத்தைப் படித்ததும். பதினேழாம் பதினெட்டாம் நூற்றுண்டுகளில். போர்த்துக்கீயன் எவனே எழுதிய நூலிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதோ வென்று வாசகர்கள் சிலர் சந்தேகிக்கக்கூடும்! அறிவு மலர்ச்சி பெற்றுள்ள இருபதாம் நூற்றுண்டில், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள அறிஞர்கள் இந்துமதத்தின் மகத்தான உண்மைகளையும் அரிய தத்துவங்களையும் ஆராய முன்வந்துள்ள வேளையில். இவ்விதமான மத வெறிகாட்டும் அறிவிலிகளும் உளராவென்று வேறு சிலர் கேட்கவுங்கூடும்! குறித்த நூல் இந்த ஆண்டில், எம் தாய்மொழியாம் தமிழில், சங்கம் விளங்கித் தமிழ் வளர்த்த. மங்கையர்க்கரசியால் சைவம் தழைத்த. மதுரையம்பதியில். தமிழ் இனத்தைச் சேர்ந்த ஒருவரால்தான் வரையப்பட்டது என்பதை வாசகர்கட்கு நினைவூட்டுகின்றோம்.

தமிழல்லாத வேறெந்த இந்திய மொழியிலாவது இவ்வித அபாண்டமான நூல் வெளிவந்திருப்பின் இதுவரையில் எவ்வளவு கிளர்ச்சி இளம்பியிருக்கும்? பௌத்தர்களே பெரும்பாலானவர்களாக வாழும் இலங்கையில் தானும் இதுபோன்ற இந்துமத வசைபுராணம் அச்சேறி வெளிவரமுடியுமா? அப்பாவித் தமிழ் இன்று ஓர் அனாதைக் குழந்தை. அதை யாரும் விரும்பியபடி பேசலாம். அத்தீச் செயல்களைக் கண்டித்து அபராதம் போடுவதற்கு எவருமே தமிழ் நாட்டில் கிடையாது. தி. மு. கட்சிக்கும் சில அந்நிய மதஸ்தாபனங்களுக்கும் பொருளாதாரத் துறையில் தொடர்பு உண்டு என்ற வதந்தி தென்னாட்டில் பரவிவந்துள்ளது. அதிலுள்ள உண்மை இப்போ சிறிதாவது வெளியாய்விட்டது. அந்நிய மதப்பிரசாரகர்களின் வஞ்சக வலையில் பாமர சனங்களைச் சிக்கச்செய்ய. பிள்ளையாருடைப்பு. புராண எரிப்பு முதலாய இயக்கங்கள் சாதாரணமாய் அமைந்தன என்பதை எவரும் மறுக்க முடியாது. தமிழனைப்பிறந்து. இந்துவாக இருந்துகொண்டே அந்த நிலை அளிக்கும் தமிழ்



அறிவு, மத சுதந்திரம் இரண்டையும் துணைகொண்டு,தாம் பிறந்த சமயத்திற்கு வேண்டுமென்றே தீமை செய்யும் தான் தோன்றித்தம்பிரான்களைப்பெற்றெடுத்த பாவம் தமிழ்நாடு ஒன்றுக்கே உரியதாகும். இப்பெரியார்களையும் அறிஞர்களையும் பற்றி. இலங்கையில் வெளிவரும் ஆங்கிலத்தினசரி ஒன்றில், வடநாட்டு எழுத்தாளரொருவர் சென்றமாசம் மிகவும் அருமையான விளக்கம்கொடுத்துள்ளார். அவர்கள் எவ்விதபண்பாடோ. இலட்சியமோ இல்லாத,செருக்குற்ற வெறும் அகராதிமூட்டைகளென்று அவர்தந்துள்ள விளக்கத்தின் ஓர்பாகத்தை அவரது சொந்தமொழியிலேயே கீழேதருகின்றோம் வாசகர்கள் மூலத்திலேயே படித்துரசிப்பதற்காக:—

"Strip every one of these Dravidian leaders of their inexhaustible store of words and they represent a remarkable nude appearance. They have nothing else except egotism and inordinate personal vanities. None or them is in any sense, a leader of his people. Their politics is a constant advertisement of attitudes for purveying their speciality of words."

சந்திரனைப்பார்த்து நாய்கள் குரைத்தால் சந்திரனுக்கு என்ன குறை வரப் போகிறது? என்றமனப் பான்மையுடனே, அல்லது பத்துமண் பிள்ளையார்கள் தெருவில் உடைபட்டால், இருபது கல்லுப் பிள்ளையார்கள் புதுக்கோயில்களில் பிரதிஷ்டை செய்யப்படுவார்கள் என்று வாய் வேதாந்தம் பேசிக்கொண்டோ தமிழ் நாட்டு இந்துக்கள் இனியும்சும்மாவிருக்க முடியாது. வரப்போகும் அபாயத்தை உணர்ந்து,அதைத்தவிர்க்கும் முயற்சிகளில்உணர்ச்சியுடன் ஈடுபட்டுகிளர்ச்சிசெய்யவேண்டும்.முதலில் வேண்டப்படுவது ஒற்றுமை. தமிழ்நாட்டை வெகுகாலமாகவாட்டிய ஆரிய — திராவிடப் பிணக்குசைவ வைஷ்ணவப்பிளவு, சாத்திர— கோத்திர—சமையலறைப் பூசல்கள் சாதிப் பிரிவுகள் வடமொழி தென்மொழிப் பிரச்சனை, முதலானவையெல்லாம் அடியோடுமறையவேண்டும். தமிழ் இனத்திடையே வேற்றுமை உணர்ச்சிபரவுபதற்கு இவையே காரணமாகும். பாரதபூமி சுதந்திரம் பெற்றபின்னரும் தென்னாடு சிறப்புருததற்கு முக்கியகாரணமும் அதுவேயாம்.

சிவபூசைக்காரர் சீவசேவையில் ஆர்வமற்றவர்கள்; சீவகாருண்யமேயற்றவர்களென்ற அபிப்பிராயம் நீடித்தகாலமாக சாதாரணமக்

களின் மனதில் பதிந்துள்ளது. ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி அடிகளார் மதுரை திருப்பெருந்திரு. சோமசுந்தரத்தம்பிரான் போன்ற சைவப் பெரியார்களின் வாக்கும் செயலும் அந்த அபிப்பிராயத்தை இன்று மாற்றிவருகின்றது. ஏனைய மடாதிபதிகளும் இவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, ஊர் ஊராக, கிராமங் கிராமமாக, சேரிசேரியாகச் சென்று சமயப்பிரசாரஞ்செய்து. சமூகப்பணியிலும் ஈடுபடுவார்களானுல் தமிழகத்திற்குற்ற அல்லல் நீங்கும். சைவம் தழைக்கும் பல்லக்கில் ஏறிப் பவனிவருங்காலம் மலையேறிவிட்டது. ஐரோப்பியப் பாதிரிகள்போல் கால்நடை யாகச்சென்று மக்களுடன் நெருங்கி உறவாடி உள்ளத்தைக் கவரவேண்டியகாலம் இது. அவர்கள் நமது வாய்ப்பேச்சுக்குத் தரும் கவனத்திலும் பார்க்கப் பன்மடங்கு கவனத்தை. நமது வாழ்க்கை எவ்விதம் நாம் பிரசாரம் செய்யும் சமயத்துடன் தொடர்புகொண்டுள்ளது என்பதை. ஆராய்வதில் செலுத்துகிருர்கள். இந்த உண்மை நமது தலைவர்களின், சமயப்பிரசாரர்களின், ஆசிரியர்களின் நினைவில் சதா இருத்தல் வேண்டும்,

லோகமான்யதிலகர் 1906ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ந் தேதி காசியில் செய்த ஓர் பிரசங்கத்தின் சாரத்தையும், 17-7-55 குன்றக்குடி அடிகளார் நாகர் கோயிலில் செய்த பிரசங்கத்தின் சாரத்தையும் அடுத்துவரும் பக்கங்களில் பிரசுரித்துள்ளோம். அரைநூற்றுண்டுகாலத்தால் பிரிக்கப்பட்டுள்ளஇவ்விரு அறிவுரைகளில் அடங்கிய கருத்தொற்றுமையை வாசகர்கள் சிந்திப்பார்களாக! அன்று திலகர் கூறியதும் கேட்டுக்கொண்டதும் இன்று தமிழ் நாட்டில் வாழும் இந்துக்களின் விஷயத்தில் முற்றிலும் பொருத்தமாய் இருப்பது அற்புதமேயாம். திலகர் வாக்கில் எப்போதுமே தீர்க்கதரிசனம் இருந்ததென்பதை எவர்தான் இன்று மறுக்கமுடியும்? அதனைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்ட மதுரை 'தியாகபூமி' என்னும் வாரப்பத்திரிகைக்கு எமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக!

நாலு குலங்க ளமைத்தான் — அதை
நாசமுறப் புரிந்தனர் மூடமனிதர்;
சீல மறிவு கருமம்— இவை
சிறந்தவர் குலத்தினிற் சிறந்தவராம்;
மேலவர் கீழவ ரென்றே — வெறும்
வேடத்திற் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியை யெல்லாம்--இன்று
பொசுக்கிவிட்டா லெவர்க்கும் நன்மையுண்டென்பான்,

*—பாரதியார் [கண்ணன்பாட்டு]*



# இந்துக்கள் ஒன்றுபட்டு நிற்க

*(லோகமான்ய திலகர்)*

ஒரே மகத்தான தருமத்தின் குழந்தைகளைப்போல, பல்
உறுப்புக்கள் பரஸ்பரத் தொடர்பு கொள்வதைப்போல ஏற்பட்
ஹிந்து தருமம். இக்கருத்தை நினைவில் கொண்டு பல்வேறு பி
ளையும் ஒற்றுமைப்படுத்த முயலுவோமானுல் மகத்தான சக்தி
அது உருவெடுக்கும். தமக்குள்ளே பிரிந்திருக்கும்வரை, ஒரு
ப்புமற்ற வகுப்புடன் தனக்கு உள்ள தொடர்பை உணராத
நாம் ஹிந்துக்களாக எழ நினைக்கவும் முடியாது. தேசியத்தில்
ஒரு அங்கமாகும்...வேதகாலத்தில் பாரதம் ஐக்கியப்பட்டிருந்
அந்தஒற்றுமை மறைந்ததுடன் நமதுவீழ்ச்சியும் துவங்கியது.
ஒற்றுமையை மீண்டும் நிலைநாட்டுவது தலைவர்களின் கடமை
கும். இங்குள்ள ஹிந்துவும் சென்னை, பம்பாயிலுள்ள ஹிந்துவை
போல ஹிந்துவேதான். *நீங்கள் வேறு உடை அணியலாம், பெ*
*பேசலாம், ஆனல் உங்களை ஆட்டுவிக்கும் உள் உணர்ச்சிகள் ஒன்*
*தான் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.* கீதை, இரா
யணம், மகாபாரதம் ஆகியவற்றைப் பின்பற்றுவது நமது பெ
வான பாரம்பரியமல்லவா? சாதிகளுக்கிடையே காணப்ப
மற்றச் சிறுசிறு வித்தியாசங்களை மறந்து இப்பொதுமையை வ
றுத்துவோமானுல் இறைவன் திருவருளால் விரைவில் நாம் எல்
சாதிகளையும் இணைத்து சக்தி வாய்ந்த ஹிந்து ராஷ்ட்ரமாக எழமு
யும். ஒவ்வொரு ஹிந்துவுக்கும் இது பேரவாவாக ஆகவேண்டு
இவ்வொற்றுமைக்காக நீங்கள் வேலைசெய்தால் சில ஆண்டுகளு
குள்ளாக ஒரே செயலில்பட ச் சிந்தனையும் நாடனைத்திலுமுள்
மக்களை ஆட்டுவித்து ஊக்குவிப்பதைக் காண்பீர்கள். இவ்வே
யை நாம் செய்தே தீரவேண்டும். நமது சமயத்தின் இன்
நிலை விரும்பத்தக்கதேயல்ல. நாம் பிரிவுபட்டவர்களாக நினை
ருேம். நமது முன்னேற்றங்களனைத்தும் அடிப்படையாக இரு
அவ்வொற்றுமை மறைந்துவிட்டது. ஒற்றுமை இன்றேல்
தம் உலகில் தனக்கு உரித்தான ஸ்தானத்தைப் பெறமுடியா
இன்றுள்ள நிலையிலேயே சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு பார

இருந்தது. புத்தமதம் வளர்ந்தது. புத்தமதத்தவராலும் ஜைனர்களாலும் ஹிந்துத்வம் தாக்கப்பட்டது, அறுநூறாண்டுக் குழப்பத்துக்குப் பின்னர் ஒரு மாபெரும் தலைவரான சங்கராச்சாரியார் தோன்றினார். நமது மதத்தின் பொதுவான வேதாந்த உண்மைகளையெல்லாம் திரட்டி அவர் நிரூபணத்துடன் பிரசாரம் செய்யச்செய்ய புத்தமதம் இந்த நாட்டிலிருந்தே அகன்றுவிட்டது.

தருமம் அழிந்து வரும்போது தான் வந்து அதனைக்காப்பதாகச் சிறந்ததும் சாசுவதமானதுமான உறுதிமொழியை கீதையில் ஸ்ரீ கிருஷ்ணன் அளித்தது நமக்கு உண்டு. ஒற்றுமையின்மையால் வீழ்ச்சி ஏற்படுகையில், நல்லவர்கள் வாட்டப்படும்பொழுது, ஸ்ரீ கிருஷ்ணன் வந்து நம்மைக் காப்பாற்றுகிறான். *தேவைப்படும் பொழுதெல்லாம் இறைவன் நம்மிடையே வருகிறான்* என்ற நம்பிக்கை நிறைந்த வாக்குறுதி ஹிந்துமதத்தைப்போல உலகிலுள்ளமதங்களில் வேறொன்றிலுமில்லை. முகம்மது நபிக்குப் பின்னர் வேறு தீர்க்கதரிசி வருவாரென்று உறுதியில்லை. ஏசுக்கிறிஸ்துவோ ஒரே முறைதான் வந்துள்ளார், இத்தனை நம்பிக்கை நிறைந்த வாக்குறுதியை வேறு எந்த மதமும் அளிக்கவில்லை. இதன் காரணமாகத்தான் ஹிந்துமதம் அழியவில்லை நாம் நம்பிக்கையின்றி இருந்ததே இல்லை... எல்லா மதங்களும் உண்மையை அடிப்படையாகக் கொண்டது.

“நீங்கள் உங்கள் மதத்தைப் பின்பற்றுங்கள். நாங்கள் எங்களதைப் பின்பற்றுகிறோம்” என்று நாம் கூறுகிறோம்...மற்ற மதத்தினர்கள் நரகத்துக்குப் போக விதிக்கப்பட்டுள்ளார்கள் என்று ஸ்ரீ கிருஷ்ணன் கூறவில்லை, இதுபோன்ற ஒரு சமநோக்கை மற்ற நூல்களிலிருந்து காட்டும்படி நான் சவால் விடுக்கிறேன். காட்ட முடியாது. ஏனெனில் அவை அரைகுறை உண்மையைக் கொண்டவை. நமது சமயம் சநாதன உண்மையில் அடிப்படை வாய்ந்தது. ஆகவே இறுதியில் வெல்வது திண்ணம். எண்ணிக்கையும் ஒரு பலம்தான். கோடிக்கணக்கானவர்களைக்கொண்ட ஒருமதம் மடியுமா? சிறப்புடன் வெற்றி பெறவேண்டுமாயின் நாம் பல்வேறு வகுப்புக்களையும் ஒரே பொது மேடையில் இணைத்து ஹிந்து சமயம் என்னும் அருவியை ஒரே கால்வாய் வழியாக, வலிமையுடன் இணைந்த சக்தியுடன் பாய்ச்சுவது அவசியம்...நமக்கு அற்புதமான இலக்கியம் உண்டு. கீதையில் பொதிந்து கிடக்கும் ஞானம்—700 பாக்



களில் புகுத்தப்பட்டுள்ள பேரறிவு—எந்த ஒரு தத்துவத்தாலும் முறியடிக்கமுடியாது என்று நான் நம்புகிறேன், நமக்கு எதிராக அணிவகுத்துள்ள சக்திகளை ஆராய்வோம்.

முக்கியமாக இரண்டு சக்திகள் உண்டு. 1. விஞ்ஞானம். 2. கிறிஸ்தவ மதம், குரோதம் நிறைந்த குற்றச்சாட்டுகள் மூலம் நமது மதம் இவ்விரண்டினாலும் தாக்கப்படுகிறது. முதலாவதைப் பொறுத்தமட்டில் மேலைநாடுகளில் ஒரு பெரும் மாற்றம் தோன்றி வருகிறது. அவர்கள் கண்டுபிடிக்கும் உண்மைகள் அனைத்தும் நமது ரிஷிகளுக்குத் தெரிந்திருந்தன. நவீன விஞ்ஞானம் நமது தொன்மையான ஞானத்தை படிப்படியாக ஒப்புக்கொண்டும் நிரூபித்தும் வருகிறது. ஆராய்ச்சிக் கூடங்களை நிறுவி விஞ்ஞான அறிவு பரவப்பரவ நமது சமயத் தத்துவங்களனைத்தும் நிரூபிக்கக்கூடிய சத்தியத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டவையென்று அவர்கள் உணர ஆரம்பித்துவிட்டார்கள். உதாரணமாக “சைதன்யம் அனைத்திலும் நிரம்பியுள்ளது.” இது முற்றிலும் ஹிந்து தத்துவமாகும், இந்த வேதாந்தத் தத்துவம் நவீன விஞ்ஞானப்படி அப்படியே உண்மையானது என்று பேராசிரியர் போஸ் அண்மையில் நிரூபித்துள்ளார்.

உடலைச் சாராமல் ஆத்மா வாழும் என்ற தத்துவத்தை எடுத்துக்கொள்வோம். கர்மம், புனர்ஜன்மம் ஆகிய தத்துவங்களும் இதனுடன் சேர்க்கப்பட்டவையே. ஸ்பென்ஸர் [ஒரு ஆங்கில சிந்தனையாளர்] இதனை நம்பவில்லை. ஆனால் அண்மையில் சேர் ஆலிவர் லாட்ஜ், மேயர் போன்றோர் ஆத்மா உடலுடன் இறப்பதில்லை என்று நம்பியிருப்பதையும் காணும் அரும் வாய்ப்பு நமக்குக் கிடைத்துள்ளது. நவீன விஞ்ஞானப் புனர்ஜன்மத்தை இன்னம்ஒப்புக்கொள்ளாவிடினும் கர்மவாதத்தை ஒப்புக்கொள்கிறது. ஆனால் அது கிறிஸ்தவர்களுடைய நம்பிக்கை அல்ல, ஒவ்வொரு தடவையும் கடவுள் புதிய ஆத்மாவைக் கொடுக்கிறார் என்பது அவர்களது நம்பிக்கை. இவ்வாறாக மேலைநாடுகளில் மாற்றம் ஏற்பட்டு வருவதைக் காண்போம். நவீன விஞ்ஞான அறிவால் நமது எதிரிகள் விரைவில் மறைகிறார்கள். தைரியம் பூண்டு இறுதி வெற்றிக்காகக் *கடுமையாக உழையுங்கள்! சற்றே முயற்சித்து ஒற்றுமையை நோக்கிச் செல்வீர்களாயின் சிறந்த வருங்காலம் உண்டு.* இப்பொழுதெல்

லாம் அமெரிக்கர்கள் வேதாந்தத்தைப் படிப்பது மட்டுமன்றி ஆராய்ந்தும் வருகிறார்கள். இதயத்துடிப்பை நினைத்தால் நிறுத்த முடியுமென்று ஐரோப்பிய வைத்தியர்கள் நம்புவதில்லை. ஆனால் அதற்கு மாறாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. நவீன விஞ்ஞானம் வேதாந்தத்தையும் யோகத்தையும் தெளிவித்துவிட்டது. இவை நமக்கு ஆத்மீக ஒற்றுமையைத் தருகின்றன. நமது தத்துவ புத்தகங்களைத் திருத்தியமைத்து உலகின்முனே விஞ்ஞான ரீதியாக சமர்ப்பிக்க வேண்டும்.

மீண்டும் கூறுகிறேன், ஒற்றுமை வேண்டும் மாகாண வாதங்களை விட்டொழித்து எல்லா வகுப்புகளுக்கும் அடித்தளத்திலுள்ள ஒற்றுமையை வற்புறுத்தி வளர்க்காவிடில் நாம் நமக்கும் நமது முன்னோர்களுக்கும் செய்யவேண்டிய கடமையைச் செய்யத்தவறியவர்களாவோம். நாம் சோம்பி இருந்துவிட்டோம். சோம்பல் காரணமாக நமது செல்வக் குவியலில் உள்ளது இரும்பல்ல தங்கமே மறைந்து கிடக்கிறது என்று நமக்கு அன்னியர் கூறத்தேவை ஏற்பட்டுவிட்டது! நீங்கள் பயன்பெற விரும்பினால் நவீன விஞ்ஞானமும் கல்வியும் உங்களுக்குத் துணைபுரியத்தயாராக உள்ளன. கிறிஸ்தவர்கள் இங்கு வந்து கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் காலம் மாறி நமது பிரசாரகர்கள் உலகெங்கும் சனாதன தருமத்தைப் பரப்பும் காலத்தை நாம் காண்போம். சக்தியனைத்தையும் ஒருமுகப்படுத்துங்கள்...இறுதியாக எல்லா வகுப்புகளையும் நன்கு ஒன்றுபடுத்தி உலக நாடுகளுக்கிடையே நமது ஸ்தானத்தை உரிமையுடன் கோரி அதனைப் பெறுவீர்களாக. மீண்டும் கவனத்தை ஈர்க்கிறேன்.

எனக்கு ளேஉயி ரென்ன இருந்தநீ
மனக்கி லேசத்தை மாற்றல் வழக்கன்றோ
கனத்த சீரருட் காட்சி யலாலொன்றை
நினைக்க வோஅறி யாதென்றன் நெஞ்சமே.

*—தாயுமானவர்*



# பிளவுபடாது நாட்டைக் காப்போம்.

*(குன்றக்குடி அடிகளார்)*

ஹிந்து சமுதாயத்தின் பண்பினை, கலாசாரத்தை, இவையன்ன பிறவற்றைக் காப்பதில் கங்கணம் பூண்டு நிற்கும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் பேறு பெற்றமைக்கு பெருமை கொள்ளுகிறேன் இது ஒரு தேசீய இயக்கம். தேசீயம் என்பதன் பொருள் தற்காலத்தில் தவறாக வழங்கப்படுகிறது. ஒருவித ஆடையை அணிவது தேசீயம்; சுதேச சாமான்களை வாங்குவது தேசீயம்; கதரணிவது தேசீயம் என்று எண்ணி நடப்பதோடு தேசீய உணர்ச்சி பெற்றதாகத் திருப்தியடைந்து விடுகின்றனர். ஆனால் இந்த நாட்டைப் பண்போடு விளங்கச்செய்த சமயம், கலை, நாகரீகம் இவைகள் தேசீயத்தின் அடிப்படை என்பதை மறந்துவிடுகின்றனர். ஒப்புக்கொள்ளத் தயங்குகின்றனர்.

இமயமுதல் குமரிவரை தொன்றுதொட்டு இந்நாட்டை ஒரு பொதும் கலாசாரம் வழி நடத்திவந்துள்ளது. அது மக்கள் உள்ளங்களைப் பண்படுத்திற்று. இந்நாட்டு மக்களை மட்டும் அல்லாது பிராணிகளையும் செடிகளையும்கூட அன்புடன் ஆதரிக்கும் மனோ நிலையை அது உண்டுபண்ணிற்று. ஆடு ஒன்றைக் காப்பாற்ற புத்தபிரான் உயிர்கொடுக்க முன்வந்தார். காட்டு முல்லை படர்வதற்காக பாரிமன்னன் தனது அரச ரதத்தையே ஈந்தான். இப்படிப்பட்ட மேதைகள் பலர் பிறந்தது இந்நாடு. இந்நாட்டு அறிஞர்கள் வெறும் ஜடப்பொருள் ஆராய்ச்சியோடு நின்றுவிடவில்லை. அவர்கள் பரந்த உள்ளம் படைத்தவர்கள். காந்தியடிகள். விரோதிகளையும் நேசித்து பெருமை பெற்றார் என்றால் அது ஒரு தனி மனிதன் பெருமையல்ல. அது இந்நாட்டு மண்ணின் பெருமையென்றே கூறவேண்டும். நிலப்பிரச்சனையைத் தீர்ப்பதற்குக்கூடக் கால்நடையாக நடந்து பூமியைத் தானமாகப்பெற்று, மக்கள் வாழ்க்கையை மலரச்செய்வது இந்த நாட்டில்தான். தர்மத்தின் அடிப்படையில் எங்கேனும் அரசியல் நடந்ததென்றால் அது இந்தப் புண்ணிய பூமியில்தான். சட்டத்தையும், தண்டனையையும் மட்டுமே கையாளும் மேல்நாடுகள் இதுபற்றி கனவும் காணமுடியாது.

விஞ்ஞானி ஒருவன் இரு கருங்கற்களின் சக்தியை ஆராய நேர்ந்தது, ஒன்று இமயத்திலுள்ளது. மற்றொன்று ஆல்ப்ஸ் மலையிலுள்ளது. இமயத்திலுள்ள கல் ஆல்ப்ஸிலுள்ள கல்லைப் போல பன்மடங்கு சக்தி உடையதாகக் காணப்பட்டது. எண்ணற்ற முனி சிரேஷ்டர்களும், ரிஷிபுங்கவர்களும் வாசஞ்செய்து அவர்களது பாதத்தடம்பட்டு சிந்தனை அலைகள் மோதி இமயத்திலுள்ள கற்கள் கூட இப்பெரும் சக்தி பெற்றன.

தமிழ் நாட்டு வரலாற்றைத் துருவி ஆராயும் போது தியாகத்தின் பெருமை விளங்கும். கிறிஸ்தவர்களும், மகமதியர்களும் தாக்கியபோதிலும் நம்மவர் தன்னை மறந்து கைவிட்டபோதிலும் கூட இந்நாட்டுப் பண்பாடும், நாகரிகமும் நீடித்து நிற்கிறது. காரணம் தியாகத்தின் அடிப்படையில் அவை அமைக்கப்பட்டவை. மக்கள் வெறும் கோட்டைகள் மூலம் தம்மைக் காக்க முடியவில்லை. அவர்கள் இறைவனிடத்தில் அடைக்கலம் புகுந்து இறைவாழ்வு நடாத்தி தியாகத்தின் உச்ச நிலையில் நின்றமையால் மனித நாகரிகம் இந்நாட்டில் வளர்ந்தோங்கியது. இது பாரதநாட்டின் தனிப்பெருமையாம். *தன்னைக் காப்பாற்ற முடியாத நாம் பிறரைக் காப்பாற்றுவதாகக் கூறுவது அர்த்தமில்லை, ஆகவே நமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் காப்பாற்றத் தகுந்த சக்தி படைத்தவராக நாம் மிளிர வேண்டும்.* அப்போது நம்மிடையே எண்ணற்ற கம்பன், வள்ளுவன் போன்ற அறிஞர்கள் தோன்றுவர். *வேதங்களையும் உபநிஷத்துக்களையும் படிப்பதோடுமட்டும் நிற்பதும் வெறும் சடங்குகள் செய்தாலும் மதமாகிவிடாது.* வாழ்க்கையில் கடைப்பிடிக்காமல் படிப்பதோடு நிற்கும் அறிவு ஆபத்துத் தரும். ஜீரணிக்காத பெரும் உணவு உடலை எங்ஙனம் கெடுக்குமோ அதுபோல பயன் படுத்தப்படாத அறிவு அஜீரணமாகி ஆபத்தை உண்டுபண்ணும். ஆகவே வேதங்களிலும், உபநிஷத்துக்களிலும் உள்ள தத்துவங்களை ஜீரணமாக்கி வாழ்க்கையில் பயன் படுத்த வேண்டும்.

நல்ல முறையில் இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்து நமது வேதங்களிலிருக்கும் தத்துவங்களை அவர்கள் செயல் முறையில் கலக்கச் செய்ய வேண்டும்.

பூவுலகம் பூராவையும் ஆளமுடியும். ஆனால் சித்தத்தை அடக்கல் அரிது. மனக்குரங்கை அடக்கிப் பலவிதமான பிளவு சக்திகள்



# உலப்பிலா ஆனந்தம்

(*பொ. கனகராசா*)

ஒருதாயானவள் 'ஐயிரண்டு திங்களாக அங்கமெலாம் நொந்து சுமந்து' பெறுகின்றாள் ஒரு குழந்தையை. அதைப் 'பையல்' என்று கேள்விப்பட்டதும் பரிந்து எடுக்கின்றாள். வேண்டாம் வேண்டாம் என வந்து பிறந்த குழந்தையல்ல அது. 'சந்ததமும் இறைவனையே நோக்கி யுகந்து வரங்கிடந்து ஈன்றெடுத்த' ஆண்மகவு. அம்மகவைத் தாலாட்டிச் சீராட்டி வளர்க்கின்றாள் தாய். அக்குழந்தை பசித்தெழுந்த நேரங்களில் தனது பசியை அறிவிக்கும் முகமாக அழும்; தாயானவள் பசியைத் தீர்ப்பதற்கு உடனே பாலை ஊட்டுவாள். ஆனால், குழந்தை அழுவதற்கு முன்பாகவே அதன் பசியை அறிந்து பாலூட்டுந் தாயும் இருக்கிறாள். அத்தகைய தாய்மையின் சிறப்பை என்னென்றியம்புவது? அப்படியான 'தாயினுஞ் சாலப்பரிந்து' இரங்குகின்றானும் இறைவன். தேவையான நேரங்களிலேயே தாய் தன் தனயனுக்குப் பாலூட்டுவாள்; மற்றைய நேரங்களில் தன் வேலைகளில் ஈடுபட்டிருப்பாள். ஆதலினாற்றான் 'தாயினுஞ்சாலப்பரிந்து' என்று குறிக்கின்றார் பக்தர். இவ்வண்ணம் பரிவற்ற இறைவன், பல பற்றுக்களால் தாக்கப்பெற்று அல்லற்படும் அடியாரை ஆட்கொண்டருளும் நோக்கோடு அவர்தம் ஊனினை

*முற்பக்கத் தொடர்ச்சி*

நாட்டைத் துன்புறுத்தாமல் பாதுகாத்து சுதந்திர பாரதத்தை ஒருமைப்புணர்ச்சியால் ஒன்றுபடுத்த வேண்டும். இந்த 1955ம் வருடத்தில் நம்மைவிட மிகவும் பிற்காலத்தில் தலையெடுத்த கிறிஸ்தவர்கள் அடி பிறழவில்லை, ஆனால் நாம் அடி பிறழுகிறோம். நம்மிடையே பிறமதங்கள் புகுந்து நம் சமுதாயத்தை உருக்குலைக்கின்றன. அவை நம்மிடையேயுள்ள தியாக உணர்ச்சியை மெதுவாக மறையச் செய்கின்றன. வாழவேண்டிய நம் சமுதாயத்தின் உயிர்நாடி தியாகம் என்பதை மறந்துவிடக்கூடாது. பாரதத்தின் புகழ் பணப் பெருக்கத்தால் உண்டானதல்ல. தியாகமும் சேவையும்தான் நம்மை உலகக் கண்ணில் உயர்த்திக் காட்டுகின்றன. இவற்றைக் காட்டும் சின்னம்தான் நமது காவிக்கொடி.

உருக்கி 'உள்ளொளியைப் பரப்புகின்றார்': இவ்வுடல் நிலையற்றது. அதன்மேல் பற்றுநீங்குதல் வேண்டுமென்பதை தாயுமானாரும்,

*"பொய்யுலகும் பொய்யுறவும் பொய்யுடலும் பொய்யெனவே*
*மெய்யநினை மெய்யெனவே மெய்யுடனே காண்பேனே"*

என்று கூறுகிறார். ஆதலால், இந்நிலையற்ற உடலில் இருக்கும் ஆசையை அகற்றி தன்னையறிந்து கொள்வதற்குரிய மெய்யுணர்வை அருளுகின்றான் இறைவன்; "ஊனினை உருக்குந்தோறும் உள்ளொளியை பெருக்குகின்றான்" இறைவன்: பின் அதைப் பேரொளிப் பிளம்பாக்குகின்றான்: இவ்வளவோடு இறைவன் நின்றுவிடவில்லை. தனது தூய இன்பத்தேனைப் பொழிகின்றான். 'தேன்' என்று குறிக்கும்பொழுது, ஆனந்தத்தை அளித்தாலும், அது அறிவை அழிக்கக்கூடியதாக அமைந்திருக்கின்றது. அம்மயக்கத்தை விலக்குவதற்காக இறைவனின் அருளமுதத்தைக் குறிப்பிடும்பொழுது 'உலப்பிலா ஆனந்தமாய தேனினைச்சொரிந்து' என்று சிறப்பித்துக் கூறுகின்றார். ஆகவே, தேன் கொடுக்கும் இன்பத்திலும் பார்க்க இறைவன் பொழியுமின்னருள், 'உலப்பிலா ஆனந்த'மாக இருக்கின்றது. இப்படியாக இறைவன் மெய்யொளியைப் பெருக்கி, ஆனந்தமாய தேனைச் சொரியும்போது. அருள்நெறியினின்றும் அகலாதும் பெருக்கிய ஒளி மங்கிப்போகாதும் மேலும் சுடர்விட்டு ஒளிருமாறும் அவன் 'புறம்புறந்திரிகின்றான்'.

தாயானவள், குழந்தை நடக்கத் தொடங்கும்பொழுது தனது அணைப்போடு துணைக்கூட்டிச்செல்வதுபோல இறைவனும் தன் அடியவரை உடனழைத்துச் செல்வானாதலால், 'புறம் புறந்திரிந்த செல்வமே!' எனவருளினார் பக்தர்.

இந்நிலைமை மாறி பின் இறைவனின் அருளாற்றலிலும் சிறிது பெற்றுவிடுகின்றார். அதனால் தம்மிடத்தேயுள்ள பற்றுக்களை நீக்கிப் பற்றற்றானாகிய பரம்பொருளைப் பற்றிவிடுகின்றார். இதனாற்றான் திருவள்ளுவநாயனாரும்,

*"பற்றுக பற்றற்றான்பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு"*

என்று கூறினார் போலும்.



இறைவனைப் பற்றும் பொழுதும் அவனைத்தொடர்ந்து அங்கிங்கசையவிடாமல், 'சிக்கெனப்பிடித்து' விட்டதாகக் கூறுகின்றார். 'உலப்பிலா ஆநந்தமாய தேனினை'ப் பெற்றதும் பிரிந்த இறைவனைப் பற்றிக்கொண்டு ஒன்றிய நிலையை மணிவாசகப்பெருமான் வெகு அழகாக அருளுகின்றார். அதாவது.

"பால்நினைந்(து) ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்(பு) இலா ஆநந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந் கருளுவ தினியே"

—(*பிடித்தபத்து*)

என்ற திருவாசகம் இவற்றை விளக்குகின்றது.

இறைவனை அறிவதற்குரிய மெய்ப்புணர்வைப் பெறும் நிலையையும், அதையடைந்தபின் மாறிமாறிச் சிறந்துவிளங்கும் மற்றைய நிலைகளையும் கடைசியாக இறைவனை அண்மியதும் அடையும் ஆனந்தப் பெருக்கையும் அதனோடு பெறும் ஒன்றிய நிலையையும் தாய்மையோடு ஒப்பிட்டு இறைவன் அருளின் பெருமையையும் சிறப்பையும் இத்திருவாசகப்பா விரிவாக விளங்கவைக்கின்றது.

## ஸ்ரீ சிவானந்த வணக்கம்

### விருத்தம்

தூயநீர்க் கங்கை யண்மை துங்கவரேத்தும் மாண்பின்
பாய்பரி வுருவாம் மூர்த்தி பிணுகியின் நாமம் பூண்டு
ஆய்கலை அனைத்து மோர்ந்து அறிவுற அவனியோர்கள்
தாயென ஹிருஷீ கேசத்தில் திகழ்தரு தேவே போற்றி !

காரியை நீர்மை கொண்டு காசினி உய்யத் தோன்றி
பாரினில் அறுபத்தைந்தாண்(டு) இருந்தவ வாழ்வு கொண்டு
நேர்ந்தவோர் நலங்கள் நல்கும் நூல்பல திரட்டி யாண்டே
சீருற ஞான பக்திகர்மமும் விரித்தாய் போற்றி !

# திருமுறைக்காட்சிகள் (1)

## என்னிலும் இனியான்

*(முத்து)*

ஒருநாள் எனது நண்பருடைய குழந்தை ஒன்றை மடிமீதேந்தி, அதன் மழலை மொழிகளை அநுபவித்துக்கொண்டிருந்தேன். குழந்தையோடு யானும் ஏதாவது பேசவேண்டும் என்று தோன்றியது. உனக்கு இனியவர் யார்? என்று கேட்டுவைத்தேன். உடனே குழந்தை அம்மா என்றது. நண்பர் திரும்பிப்பார்த்து பேச வாய் எடுத்தார். அதற்கிடையில் குழந்தை அப்பா என்றது. நண்பருக்கும் எனக்கும் சிரிப்பு அடக்கமுடியவில்லை. எனக்கு மிகவு ஆச்சரியமாக இருந்தது. இந்தச் சின்னஞ்சிறு குழந்தை இந்த வயதிலே தந்தையின் முகக்குறிப்பை அறிந்து அவரைத் திருப்திப் படுத்தக் கற்றுக்கொண்டுவிட்டதே. ஆனால் குழந்தையின் உண்மையான மனநிலை முதலில் சொல்லிய மறுமொழியிலேதான் அடங்கியுள்ளது. குழந்தைக்கு இனியவன் அன்னையே.

இன்னொருநாள் நண்பருக்கும் அவருடைய இல்லாளுக்குமிடையில் ஒரு சிறு விவாதம். மனைவியாரின் ஒன்றுவிட்ட சகோதரர் ஒருவருக்கு கலியாணவீடு. ஒருவாரத்திற்கு முன்பே இருவரையும் வந்து கலியாணவீட்டை நடத்திவைக்கும்படி அழைப்பு வந்திருந்தது. நண்பர் கூறினார், எனக்கோர் விடுமுறை பெறுவது கஷ்டம். நீர் ஒருவாரத்திற்கு முன்பே சென்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளைக் கவனியும். நான் எப்படியும் கலியாண தினத்தன்று வந்துவிடுகிறேன். 'அப்படியானால் உங்கள் சாப்பாடு'? ஒருவாரத்திற்கு எப்படியோ நான் பார்த்துக்கொள்ளுகின்றேன் நீர் செல்லுவீராக!

'நீங்கள் என்னோடு வந்தால்தான் நான் செல்வேன்.' உங்களைக் கோட்டலில் உப்புப் புளியில்லாச் சாப்பாடு சாப்பிடவிட்டு நான் மாத்திரம்போய் அறுசுவையுடனும் சாப்பிடுவதா? உங்களில் பிறகுதான் எனக்கு மற்றவர்கள் எல்லாரும். என்று செல்ல மறுத்துவிட்டார் நண்பரின் மனைவியார். இங்கே நண்பரின் மனைவியாருக்கு



இனியவர் அவருடைய கணவனார் என்பது தெளிவாகத் தெரிகிறதல்லவா?

வேறொருநாள் நானும் நண்பரும் அயலூர் சென்றிருந்தோம் வர நேரமாகிவிட்டது. என்னுடைய வீட்டிலிருந்து அவருடைய வீடு சுமார் மூன்றுமைல் தூரத்திலுள்ளது. சாப்பிட்டுவிட்டு என்னோடு தங்கி விடியச் செல்லலாமே என்றேன். என் வருகையை எதிர்பார்த்து வீட்டில் சீவன் ஒன்று பட்டினி கிடக்கின்றது, நான் உடனே செல்ல வேண்டுமென்றார். உங்கள் வருகையை எதிர்பார்த்திருப்பார்கள் காணவில்லையே என்று சாப்பிட்டுவிட்டு தூக்கத்திற்குப் போயிருப்பார்கள் என்றேன். நண்பரோ உங்களுக்கு இதிலே அனுபவமில்லை, நான் இதோ செல்கின்றேன் என்று சாப்பிடவும் மறுத்து உடனே புறப்பட்டுவிட்டார் அப்பொழுது தான் நண்பருக்குத் தனது பாரியாள்மேல் இருக்கும் பிரியத்தை உணர்ந்தேன். நண்பருக்கு அந்தநேரத்தில் இனியவர் அவருடைய மனைவியாரே.

இது உலக வழக்கு. இப்படியே இன்னொருவரைக் கேட்டால் தமக்கினியவர் தம்முடைய சிநேகிதன் என்றுகூறுவார்,

ஒருநாள் ஒரு பக்தர் அப்பர் சுவாமிகளைப் பார்த்து தங்களுக்கு இனியவர் யாரோ? என்று கேட்டார். உடனே அப்பர் சுவாமிகள் "என்னில் ஆரும் எனக்கு இனியவர் இல்லை." என்று பதில் அளித்தார். கேள்வி கேட்ட அன்பர் பிரமித்துவிட்டார். அப்பர் சுவாமிகள் தமது வாழ்க்கையில் கண்ட அநுபவத்தின் பேறாகவே இவ்விடையளித்தார். சின்னஞ்சிறு வயதிலே சுவாமிகளுக்கு இனியவராயிருந்தவர்கள் அவருடைய அன்னையும் தந்தையுமாவர். அவர்கள் இருவரையும் சின்னவயதிலேயே இழந்தார். அதன்பின் இனியவராய் விளங்கியவர் தமக்கையாராகிய திலகவதியார். சகல கலைகளையும் கற்றார். திலகவதியாரின் இனிமையும் கெட்டுவிட்டது. கலையே இனிமையானது. கலையோடு சேர்ந்து தருமசேனர் என்ற பட்டமும் புகழும் வந்தன. அதுவே இனிமையென்று கருதினார். தம்மை மறந்தார். இந்த நேரத்திலேதான் இறைவன் கருணை பாலித்தான். சூலைநோய்மூலம் தகுந்ததொரு பாடத்தைக் கற்பித்தான். இதுவரையிலே தான் என்றொரு பொருள் இருக்கிறதே என்ற சிந்தனை அப்பரிடம் உண்டாகவில்லை. நோய் வருத்தும்போது இன்று

வரையிலே இனியனவாய் இருந்தவையெல்லாம் கசந்தன; அவர் சிந்தனையைவிட்டு மறைந்தன. இப்பொழுதுதான் தனக்குத் தன்னிலும் பார்க்க இனியவர் எவரும் இருக்கமுடியாது என்ற உண்மையை உணர்ந்தார்.

ஜெர்மன் தேசத்து விஞ்ஞானி ஒருவரின் ஆராய்ச்சி நினைவுக்கு வருகின்றது. ஒருநாள் அவ்விஞ்ஞானி ஒரு குரங்கையும் அதன் குட்டியையும் ஒரு கண்ணாடி ஜாடிக்குள்ளே விட்டார். குட்டி தாயின் மார்பிலே கட்டிப்பிடித்துக்கொண்டிருந்தது. சிறிது சிறிதாக தண்ணீரால் ஜாடியை நிரப்பினர். குட்டி தண்ணீருள் மூழ்குந்தருணம் வந்தது. தாய்க்குரங்கு உடனே குட்டியைத் தூக்கித் தோள்மேலே வைத்துக்கொண்டது. தண்ணீர் மேலும் மேலும் கூடிவந்தது. தாய்க்குரங்கின் மூக்களவிற்கு வந்துவிட்டது. விரலில் உயர்ந்து நின்றது குரங்கு. தண்ணீர் உயர்ந்துகொண்டே வந்தது. இன்னும் தாமதித்தால் தன் உயிருக்கு ஆபத்து என்று உணர்ந்தது குரங்கு. குட்டியைத் தண்ணீருள்ளேபோட்டு அதன்மேல் ஏறி நின்றுகொண்டது. குரங்குக்குந் தன்குட்டி பொன்குட்டியல்லவா? குரங்குக்கு இனிமையைத் தந்தது குட்டியே. ஆனல் தன்னுயிருக்கு ஆபத்து வந்தபோது குட்டியின் இனிமையை மறந்துவிட்டதல்லவா? ஆதலால்

"என்னிலாரும் எனக்கினியாரில்லை"

என்றது முழுவதும் சரியல்லவா?

ஆனல் அப்பர் சுவாமிகள் அவ்வளவில் நின்றாரல்ல.

"என்னிலும் இனியான் ஒருவன் உளன்"

என்கிறார். அகந்தையால் தலைகால் தெரியாது மயங்கியிருந்த காலத்து துன்பத்தைக் கொடுத்து இன்பநிலைக்கு திருப்பியவன் ஒருவன் உளன் அல்லவா? நாம் தான் இன்பம் வேண்டாம் என்று வெறுத்த காலத்தும் புறம் புறந்திரிந்து எமது இன்பநிலையைக் கவனிப்பவன் ஒருவன் இருக்கின்றான். எங்களைப்பற்றி நாங்களே நினையாத காலத்தும் எங்களை இடைவிடாது நினைத்துக்கொண்டிருப்பவன் ஒருவன் இருக்கின்றான். அவன் எந்தநேரமும் எனக்குள்ளே



மூச்சுக் காற்றாக சென்றுகொண்டும் வெளிவந்துகொண்டும் இருக்கின்றான். அவன் இல்லாத இடமே கிடையாது. அவன் உள்ளும் இருந்து என் நன்மையே கவனிக்கின்றான்: புறம்பும் இருந்து என் நன்மையே கவனிக்கின்றான். அவன் யார்?

"என்உளே நிற்கும் இன்னம்பர் ஈசன்"

பிறரிடத்து ஒருவன் பிரியம் செய்வதெல்லாம் தனது சந்தோஷத்துக்காகவேயாம்: தன்மேலுள்ள இனிமையினல் தான்பிறரிடம் பிரியமாய் இருக்கிறாதலின் தன்னிலும் இனிய பிறர் ஒருவற்கு இல்லை. யான் என்னிடத்துக் கொள்ளும் பிரியத்திலும் மிகப் பிரியம் என்னிடம் கொண்டு, எனது நன்மையையே (நான் அறியாத போதும்) கோரி முயன்றுவருதலின் ஈசன் என்னைக்காட்டிலும் எனக்குப் பிரியமானவன், என்னை, அறியாமையால் யான் கெடுக்க நினைத்தாலும் அதற்கு இடங் கொடாதவன் ஈசன். உயிர்ப்பாய், உயிர் தருபவனாய், உயிருக்கு உயிராய் இருப்பவன். எனக்குப் புறத்தே சண்காணத் தோன்றி நிற்பவனும் மீண்டும் என்நெஞ்சினுள்ளே புகுந்து நிற்பவனுமான ஈசன் என்கிறார் அப்பர் சுவாமிகள். அதனை நீங்களும்பாடி அனுபவியுங்கள்.

என்னில் ஆரும் எனக்குஇனி யார்இல்லை
என்னி லும்இனி யான்ஒரு வன்உளன்:
என்உ ளேஉயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு
என்உ ளேநிற்கும் இன்னம்பர் ஈசனே.

பொருள்:—*என்னைவிட எனக்கு இனிமையானவர் [மானுடரில் எவரும்] இல்லை; [ஆனல்] என்னையும்விட இனியவன் ஒருவன் இருக்கின்றான். [அவன் யாரெனில்] என் உடம்புக்குள்ளே ஆவி [மூச்சு] ஆகி வெளியிலே வந்தும் உள்ளே போயும் எனக்குள் [அந்தர்யாமியாய்] நிற்கும் திரு இன்னம்பர்ப் பெருமானே யாவான்.*

இப்பாட்டை நோக்குக: ஊன்றி நோக்குக. முதலடி 'எல்லாம் என்னல்' என்று செருக்கி நடக்கும் இளைஞனுக்கு ஆர்வமூட்டும். ஆர்வத்தால் ஆரவாரிக்கும் அவனுக்கு இரண்டாம் அடி அறிவு கொளுத்தும். அதன்கண் பரத்தின் உண்மை ஒளிர்கிறது.

# சிவானந்தத் தலைவன்.

"கா. சி. தி."

(ரெகுபதிராகவ ராஜாராம் என்ற மெட்டு)

உலகினை உயர்த்தவே உழைப்பவன் தலைவன்
பலகற்று யாவர்க்கும் பணிசெய்வோன் தலைவன்
வழுக்கு நிலத்தினில் ஊன்றிடும் கோல்போல்
வழுக்கிடும் வாழ்வினில் உதவுவான் தலைவன்

ஆசைகள் ஆசைகள் அளவில்லா ஆசைகள்
அடுத்துக் கெடுத்திடும் அத்தனை பேரையும்
பொல்லாத ஆசையாம் பேய்தனைக் கொன்றிட
நல்லதாய் அருள்நெறி காட்டினான் தலைவன்

நேசமாய் உலகினில் நியமங்கள் நடந்திட
தேசமாம் தாய்மீது பற்றையே கொண்டிட
சீவர்கள் யாவர்க்கும் அருள்நெறித் திவ்விய
சீவனம் சமைத்தவன் திருநிறை தலைவன்.

சாதியை மதபேதச் சண்டையைப் பாராமல்
நீதியை யாவர்க்கும் நித்தியம் வழங்கிட
வழியினைச் செய்தநல் லருள்நெறித் தலைவனும்
வழிகாட்டி ரிஷிகேசச் சாலையின் தலைவனும்

நாட்டிலே நன்னெறி நலிந்திட்ட நாளிலே
வீட்டிலே அறநெறி வீழ்ந்திட்ட நாளிலே
காட்டினான் நன்னெறி சிவானந்தத் தலைவனே
பாட்டிலே பாடுவோம் பணிவொடு வணங்குவோம்

---

*முற்பக்கத்தொடர்ச்சி:-*

அதை அவன் பார்க்கிறான், அவன் பரம் எங்கே இருக்கிறது? என்கிறான். மற்ற இரண்டடியும் பரம் உள்ளக்கோயில் கொண்டிருப்பதை அறிவிக்கின்றன. அஃது இளைஞனுக்கு விளக்கமாகிறது. நமக்கு நாம் இனியவர் என்று நினைப்பது அறியாமை என்றும், அது நம்மை வஞ்சிக்கிறது என்றும், உயிர்கட்கு உண்மையில் இனிமை செய்வது பரம்பொருள் என்றும், அப்பரம்பொருள் நமக்குள்ளிருந்தே நமக்குத் துணைபுரிகிறது என்றும் பொதுவாக உலகமும் சிறப்பாக இளமை உலகமும் உணர்ந்து 'பரம்பொருள் வாழ்க்கை வழி' என்று தெளிந்து நடக்குமாறு இத்திருப்பாடல் வழிகாட்டுகிறது. இத்திருவாக்கில் உறுதிகொள்வோமாக; கொண்டால் பரம்பொருள் இயக்க நாம் இயங்குவதை நன்கு தெளியலாம்.



# ஜபயோகம்.

(சுவாமி சிவானந்தர்)

ஜபயோகம் என்பது மந்திரம் சொல்லிக்கொண்டே இருப்பது. ஒருபெயரில் எண்ணற்ற சக்திகள் இருக்கின்றன. மானசிக ஜபத்திற்குச் சக்தி அதிகம். தண்ணீரில் நின்று ஜெபித்தால் இன்னும் அதிகம் சக்தி உண்டு ஜபம் ஸ்வபாவமாகிவிடவேண்டும். அனுட்டானம் புரச்சரணம் என்பவை இங்கே விளக்கப்படுகின்றன.

ஒரு மந்திரத்தை விடாமல் ஜபித்துக்கொண்டிருப்பதும் தெய்வத்தின் நாமங்களுள் ஒன்றைச் சொல்லிக்கொண்டிருப்பதும் ஜபயோகம்.

தெய்வத்தினுடைய ஒவ்வொரு பெயருக்கும் அறியக்கூடாத ஒரு சக்தி இருக்கிறது கணக்கற்ற சக்திகள் ஒருநாமத்தில் நிற்கின்றன.

ஒரு பெயரையாவது, மந்திரத்தையாவது மூன்றுவிதமாக ஜபம் செய்யலாம்.

1. வைகரி ஜபம்:—அதாவது அந்த சப்தம் கேட்கும்படியாகச் சொல்வது.

2. உபாம்சு:—அரைகுறையாகக் கேட்கும்படியாகச் சொல்வது.

3. மானஸம்:—மனதிலேயே சொல்லிக் கொள்வது.

மானச ஜபம் என்பது மந்திரத்தையோ நாமத்தையோ மனதினுலே மாத்திரம் சொல்வதாகும். யாரும் அதைக் கேட்கமாட்டார்கள். அதுவே எல்லாவற்றிலும் சக்திவாய்ந்தது. ஆனல் சாதகர்கள், முதலில் மானச ஜபம் செய்யமுடியாமல் இருக்கிறார்கள். மற்ற இரண்டு வகை ஜபங்களை விட இது பதினாயிரம் மடங்கு அதிக பலனைத் தருவதாகும்.

மனது அதிகம் ஓடிக்கொண்டிருக்குமானால் உச்சாரணம் பண்ணிஜபம் செய். அப்பொழுது மற்றச் சப்தங்கள் காதிலே விழமாட்டா. தாரணை ஏற்படும். மனது உறைத்து விட்டால் மானசீக ஜபம் செய். ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்லுகிறார், "எல்லா யக்ஞங்களிலும் உயர்ந்ததான ஜபயக்ஞமாயிருக்கிறேன்"

கங்கை, யமுனை, கோதாவரி, காவேரி என்ற புண்ணிய நதிகளிலே நின்று கொண்டு ஜபம் செய்தால் அதிக பலன் பெறலாம், ஸமர்த்தஇராமதாஸ் இப்படியே செய்தார்,

பிரம்ம முகூர்த்தத்தில் (காலை மூன்று மணியிலிருந்து ஐந்து மணிக்குள்ளே) ஜபம் செய்தாலும் பலன் அதிகம்.

உண்ணும் போதும், நடக்கும் போதும், உட்கார்ந்திருக்கும் போதும், மந்திரம் சொல்லிக்கொண்டே இரு. ஜபம் செய்வதே ஒரு வழக்கமாகி விடட்டும்.

சில சமயம் நாற்பது நாளைக்கு அநுட்டானம் செய். பால் பழம் என்பவற்றை மாத்திரம் சாப்பிட்டிரு. பிரமச்சரியமும் மௌனமும் அநுஷ்டானம் செய். புண்ணிய க்ஷேத்திரங்களில் இரு. எப்பொழுதும் ஜெபம் செய். பல லட்சங்கள் சீக்கிரம் முடி, அப்பொழுது தெய்வானுபூதி சீக்கிரம் உண்டாகும்.

புரச்சரணம் செய் ஒவ்வொரு அட்சரத்திற்கும் ஒருலட்சம் செய். பஞ்சாட்சரம் (ஓம் நமசிவய] என்பதற்கு ஐந்துலட்சம் செய் இது வெகு பலன்களை அளிக்கும். தெய்வானுபூதி சீக்கிரம் உண்டாகும். அக்காலங்களில் பிரமச்சரியம் முக்கியம்.

தெய்வானுபவத்திற்கு ஜபயோகமே மிகவும் எளிதானது. மிகவும் உறுதியானது. மிகவும் விரைவானது; மிகவும் அபாயமற்றது. மிகவும் செலவில்லாதது; குண்டலினியை எழுப்புவது: வேதாந்த சமாதி, ராஜயோகியின் அஸம்ப்ரக்ஞாதசமாதி இவையெல்லாம் கம்பீரப்பேச்சு. நீ விடாமல் வெகுதீவிரமாக ஜபயோகத்தில் இறங்கிவிடு வெகு சீக்கிரம் உனக்கு தெய்வானுபூதி உண்டாகும். ஒரு மந்திரத்தின் சப்தத்துடிப்புகள் அந்தமந்திரத்தின் தேவதையை எழுப்புகிறது, அந்தத்தேவதையின் தரிசனங்கிடைக்கும். அது சூக்குமமாகவும் ஸ்தூலமாகவும் கிடைக்கும்,



# பொன்னாரம்.

*உள்ளக்கசிவு.*

---

கிடைத்துள சித்திகள் கீர்த்தியைக் கொடுக்கக்
கிடைத்த உயர்வினால் கிறுகிறுப் பெய்திக்
கீர்த்தியை விரும்பிய கெடுமதியாளர்
கீர்த்தி வெறியால் கிருபையை மறந்து
சகலமும் அறிந்ததாய்ச் சமர்த்துகள் பேசிச்
சகலமும் ஆளவே சமயமும் பார்த்தனர்;
சாந்தம் அன்புசேர் சத்திய நெறியுடன்
சாந்தமா யுலகில் சகலரும் வாழச்
சிந்தையில் நினைத்துச் சிறந்து வாழாது
சிந்தை செருக்குறச் சிறுகுணப் பதராய்
சீரிய சால்பு போய்ச் சினம் அவாக் குரோதம்
சீரினை அழிக்கச் சீலம் நிறை அறம்
தவம் உயர் ஒழுக்கம் தயை பொறை இழந்து
தவநெறி தாழத் தந்நலப் பாசம்
தாவி யமுக்கத் தமக்கென யாவும்
தாவவும் எண்ணினர் தாரணி மக்கள்:
திருநிறை சேவை திவ்விய தொண்டு
திருஅருள் வேட்கை தியாகம் யாவையும்
தீர மறந்தனர் திக்கெலாம் ஆளும்
தீரராய்த் திகழும் திறமையைப் பெறற்குத்
துணிவுடன் அணுவைத் துளைத்துப் பிளந்து
துணிந்ததன் சக்தித் துணையால் உலகில்
தூயவை விலக்கித் தீயவை முயன்றனர்;
தூயநல் அணுவுள் துடித்திடும் ஆற்றலைத்
தெரிந்தும் தெய்வத் திருநட மிதென்னத்
தெரிந்திலர் மாயை தெளிவினை மறைத்திடத்
தேடினர் ஆக்கம், தேடினர் வெற்றி,
தேடின ரில்லைத் திரு அருட் பேற்றை:
தைரியப் பொறிக்கணுத் தண்சல வாயுவே
தைரிய துணையெனத் தொகுத்தனர் குண்டுகள்

தொல்லை வல்வினைத் தொடரினைப் போக்கும்
தொல்பரம் பொருளை தொழுதிட மறந்தனர்;
தோற்றமும் அளித்துத் தோற்றிய யாவிலும்
தோற்றியே நிலவித் தோன்றாத் துணையாய்
நயந்துடன் திரிந்து நல்லருள் புரிந்து
நயந்தெமைக் காக்க நாள்தொறும் இறைவன்
நாடியே வந்து நல்லன யாவையும்
நாடியீந் தருளலே நடனமென் றுணரார்.
நிறைந்த பேரன்பால் நீடிய அருளை
நிறைக்கவே நிலம்வான் நீர்தீ காற்றாய்
நீக்கமில் துணையாய் நிதமெமைக் காக்கப்
பரந்த இவ்வுலகாய்ப் பரந்ததை உணர்ந்திலர்:
பரந்த அருள்நிறைப் பரம்பொருள் இந்தப்
பாரெலாம் ஆள்வதைப் பாரா மக்கள்
பாரினை ஆளப் பந்தயங் கூறினர்;
பொருளைப் பெறற்குயிர்ப் பொருளையே மறந்தனர்
பொருந்திய பூதமும் புவனமும் கோளுமாய்ப்
போக்குவரத் திலாப் பூரணப் பொருளே
போக்கு வரத்துடைப் பொருளெனப் பொலிந்தனன்
மனம்போல் வாழ்வில் மன்னுயிர் வாழ
மனம்போல் யாவையும் மகிழ்ந்தெமக் கருளி
மாயா உலகின் மயக்கமும் மாற்றி
மாயையை வெல்லும் மார்க்கமுங் காட்டி
மிகுந்த பக்தியும் மிக்கநல் அன்பும்
மிகுந்து பெருகிட மிடியெலாம் நீக்கி
மீளுதற் கருளை மிகைபடச் சுரந்து
மீளவுங் கருணையை மிகமிகச் சொரிந்தனர்:
முதலும் இறுதியும் முற்றுமாய் நிறைந்த
முதல்வன் எம்மொடு முன்தொடர்ந் துற்ற
மூபெரும் புரமென முன்னோர் கூறிய
மூபெரும் மலங்களை முற்றுமே போக்கி
மையல் வாழ்வில் மயங்கா வண்ணம்
மையலை நீக்க மெய்யருள் சுரந்தனர்
வரும்இடர் தீர்த்து வாழ்வில் விரும்பிய



# நித்திய வழிபாட்டு முறை.

## 5 திருநீற்றைத், தூய்மைசெய்தல்

இடது உள்ளங்கையில் திருநீற்றைவைத்து வலக்கையால் மூடி வலது தொடைமேல் வைத்துக்கொண்டு

இராவணன் மேலது நீறு எண்ணத்தகுவது நீறு
பராவணமாவது நீறு பாவமறுப்பது நீறு
தராவணமாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங்குந் திருமேனி ஆலவாயான் திருநீறே [சம்பந்தர்]

என்ற பாடலைச் சொல்லித்துதித்து, திருநீறு பராசக்தியின் வடிவமாக எண்ணிச் சிந்தித்து, திருநீற்றைச் சிறிது எடுத்து தலை. நெற்றி உடல் முதலியவற்றில் பூசிக்கொண்டு திருநீற்றில் முழுக்காடினதாக எண்ணிக்கொண்டு தண்ணீர்விட்டுக் குழைத்துத் தலை. நெற்றி மார்பு. புயங்கள் இரண்டு. முழங்கை இரண்டு, மணிக்கட்டு இரண்டு. தொப்புள். முழங்கால் இரண்டு, வலது இடது விலாப்புறங்

---

முற்பக்கத் தொடர்ச்சி

வரமும் ஈந்து வலிந்தெமைக் காத்து
வாழ்வில் உயர்த்திய வள்ளலை நாளும்
வாழ்த்திப் போற்றி வணங்குதல் கடனே;
விருப்ப மேலீட்டால் விதிமுறை மீறி
விருப்பம் பாவமாய் விளைந்ததும் பிழையே
வீரப் பெரியோர் வெற்றுரை பொறுப்பர்;
வீரமில் வீம்பையும் விமலன் பொறுப்பன்:
வெல்லுக அன்பு! வெல்லுக அறங்கள்!
வெல்லுக சத்தியம்! வெல்லுக சாந்தம்!
வேண்டும் அன்பே விரிந்து பொலியவும்;
வேண்டுங் கருணை வெள்ளமாய்ப் பெருகவும்
வேண்டும் திருஅருள் விளங்கவே வாழ்வில்;
வேண்டும் சாந்தம் விளங்கவே உலகெலாம். (தொடரும்)

—கா. பொன்னையா

கள் இரண்டு, நடுமுதுகு, கழுத்து ஆகிய பதினாறு இடங்களில் இட்டுக்கொள்ளவும். நெற்றி, மார்பு, தோள்களில் ஆறு அங்குல அகலமும் மற்ற இடங்களில் ஒரு அங்குலமும் கழுத்து முழுவதும் கீழ்வரும் பாடல்களைச் சொல்லித் துதித்துக்கொண்டே அணிந்துகொள்ளவும். [தேகசுத்தி]

கருவாய்க் கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன் றனாமம் பயின்றே னுனதருளால்
திருவாய் பொலியச் சிவாயநம வென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதிநீ பாதிரிப்புலியூர் அரனே.

சந்திரற் சடையில் வைத்த சங்கரன் சாமவேதி
அந்தரத் தமரர் பெம்மா னானல் வெள்ளூர்தி யான்றன்
மந்திர நமச்சி வாயவாகநீ றணியப் பெற்றால்
வெந்தறும் வினையும் நோயும் வெவ்வழல்வி றகிட்டன்றே.
[அப்பர்]

கங்காளன் பூசுங் கவசத்திரு நீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே [திருமந்திரம்]

திருநீறு அணிந்தபிறகு கைகளை அலம்பி, அலம்பியநீர் இடது கைமூலம் வரும்படி செய்து இடது கையை முஷ்டியாக இறுகப் பிடித்துக்கொண்டு பெருவிரலை மட்டும் நீட்டி அதன் வழியாக கையிலுள்ள நீர் வடிந்து கீழ் உள்ள பாத்திரத்தில் விழும்படியாக வலக்கை முஷ்டியைத் தாழ்த்தி மல்லாத்திப் பிடித்துக்கொண்டு பெருவிரல் வழியாக வடியும் நீரைச் சிவதீர்த்தமாகப் பாவித்து இடது கையின் விரல்களினால் ஏற்று "சென்றாடு தீர்த்தங்களானார் தாமே" என்று சொல்லி இறைவனைத் துதித்துக்கொண்டே மேலே மும்முறை தெளித்துக்கொண்டு வாயிலும் சிறிது விட்டு அருந்துதல் வேண்டும். [ஆத்மசுத்தி]



## 6 மந்திர சுத்தி

பேரா யிரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கி னேனே. [அப்பர்]

## 7 பிராணாயாமம்

வலது சுட்டுவிரல் நடுவிரல் இரண்டையும் உள்ளே மடக்கிப் பெருவிரலால் வலது மூக்கை மூடி ஓம் சிவாய நம என்று ஐந்து முறை சொல்லி இடது மூக்கால் காற்றை உள்ளே இழுத்துக் காற்றை நிறுத்தி மோதிரவிரலால் இடது மூக்கை மூடி வலது மூக்கால் காற்றை வெளிவிடவும். மீண்டும் அதுபோலவே இடது மூக்கை மூடிக்கொண்டு ஐந்தெழுத்தை எண்ணிக்கொண்டே வலதுமூக்கால் காற்றை உள்ளிழுத்து இடது மூக்கால் வெளிவிடுக. இதுபோன்று இயன்றளவு செய்க.

இது சமயம் தொப்புளுக்கு நான்குவிரல் இடம் கீழ் உள்ள இடமாகிய மூலாதாரம் என்னும் இடத்திலிருந்து குண்டலினி என்னும் சிவசக்தி எழுந்து மேல்நோக்கி மூலாதாரம், தொப்புள் மார்பு, கழுத்து, புருவமத்தி, உச்சி, தலைக்குமேல் பன்னிரெண்டங்குலமளவில் உள்ள இடம் ஆகிய உணர்ச்சி நிலையங்களில் எழுந்தருளி விளங்குவதாக எண்ணிய பிறகு தலைக்குமேல் இரு கைகளையும் கூப்பி வணங்கி மேற்கண்ட சிவசக்தியை அங்கிருந்து கூப்பிய கரத்தினூடேயாக மார்புக்குக் கொணர்ந்து மார்பில் எழுந்தருளி விளங்குவதாகக் கொண்டு பஞ்ச புராணம் ஓதித் துதிக்க,

## 8 பஞ்சபுராணம்

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம், ஆகிய ஐந்து நூல்களையும் பஞ்சபுராணம் என்று

சொல்வது மரபு. வழிபாட்டின்போது குறைந்த அளவு மேற்கண்ட நூல்களில் ஒவ்வொன்றுக ஐந்து பாடல்களாவது பாடித் துதித்தல் வேண்டும். கூடுமானுல் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில் ஒரு பாட்டும் பதினேராம் திருமுறையில் ஒரு பாட்டுமாகப் பன்னிரு திருமுறைகளிலும் ஒவ்வொரு பாட்டாவது சொல்லித் தினந்தோறும் வழிபடுவது சைவருடைய கடமையாகும்.

மேற்குறிப்பிட்ட பன்னிருதிருமுறைகளும் தவருமல் ஒவ்வொரு சைவர் இல்லத்திலும் இருக்கவேண்டுவன. வழிபாட்டின் முடிவில் கீழ்வரும் வாழ்த்துப் பாடலைச் சொல்லி வழிபாட்டை முடிக்க.

### வாழ்த்துப்பா

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

### 9 ஜபம்

மனதைப் புருவமத்தியில் நிறுத்தி பத்மாசனத்தில் அமர்ந்தவண்ணம் மூலமந்திரத்தை 108 தரம் மனதிற்குள்ளாகவே எண்ணுக.

மூலமந்திரத்தைக் குருவிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும்.

### 10 தியானம்

இறைவன் புருவமத்தியில் ஒளிவடிவாக விளங்குவதாக எண்ணி எந்தவிதமான வேற்று எண்ணமும் இன்றி அமைதியாகச் சிவனைச் சிந்தித்து இருக்கவும். மேற்கண்டவாறு [அனுஷ்டானத்தை] அகவழிபாட்டை முடித்துக்கொண்டு புறத்தில் சிவவழிபாடு தொடங்குதல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்.



## ஜகத்குரு சிவானந்தர் தோத்திர பஞ்சகம்

[குருஸ்வாமி]

வேதமுந லெல்லாம் விளம்பும் பொருள்கடமை
ஓதி யுணர்ந்தியு மொருவனெம்—நாதன்
பவானந்த ராகரத்தின் பாரடைய வேண்டில்
சிவானந்த தேசிகனைச் சேர்.

தம்மை யுணர்ந்தோர் தவஞ்செய் வனத்திருந்து
தர்மயமே யாக்குஞ் சரணடைந்தோர்—தம்மை
நவானந்த சாகரத்தே நாமூழ்க வேண்டில்
சிவானந்த யோகிபதம் சேர்.

கங்கைக் கரையடைந்தான் கைலைதனிற்கண் ணுதலைத்
தங்கைக் கனியொப்பத் தான்கண்டான்—பொங்கும்
அவாநந்தப் பேரொளியா யாவதற்கே யெண்ணில்
சிவானந்த சற்குருவைச் சேர்

பொய்க்கலையின் மெய்க்கலையைப்புக்கறிந்துய்வதற்கே
மெய்க்குருவைக் காண விரும்புவையேல்—ஐக்கண
தவாநந்த மாருயிர் தாய்தந்தை யாகும்
சிவானந்த ஹர்ஸனடி சேர்

எப்பொருளைத் தாமடையினேதொன் றும்வேண்டாரோ
அப்பொருளே யாகி யருமறைகள்—ஒப்பும்
சிவானந்த வத்வைதச் செம்பிரமஞ் சேரச்
சிவானந்த வள்ளலடிசேர்.

## செய்தித் திரட்டு

### சுந்தரமூர்த்திநாயனுர் குருபூசைத்தினம்

மேற்படி தினம் தெல்லிப்பழை கிழக்குச் சைவப்பிரகாச வித்தியா சாலையில் 27-7-55 பிற்பகல் 4 மணிக்கு தலைமையாசிரியர் திரு. செ. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. அத்தருணம் பிரம்மஸ்ரீ மு. சிவகடாட்சக் குருக்கள் அவர்கள் நாயனுரைப்பற்றி அரியதோர் சொற்பொழிவாற்றினுர்கள்.

## வள்ளுவர் கழகம்

6-8-55 சனிக்கிழமை ஏழாலை வடக்குச் சைவப்பாடசாலையில் ஓர் வள்ளுவர் கழகத் தொடக்கவிழா ஆரம்பிக்கப்பட்டது. அத்தருணம் வள்ளுவனையும் அவர் தம் குறளையும் விளக்கிப் பல அறிவாளர்கள் சொற்பெருக்காற்றினர். கிழமைக்கு ஒருமுறை திருக்குறள் வகுப்பு நடத்துவதெனச் சபை தீர்மானித்தது.

## இங்கினியாக்கலை ஸ்ரீவேலாயுதசுவாமி கோயில்.

கல்லோயா பள்ளத்தாக்கில் சேனநாயக சமுத்திரத்தின் அருகாமையில் 6-3-51ல் நிறுவப்பட்ட ஆலயம், பின் ஏற்பட்ட தீவிபத்து காரணமாக சில நாட்கள் வழிபாடற்றிருந்தது. கல்லோயா இந்து பரிபாலன சபையினரின் நன்முயற்சியால் இவ்வாலயம் புதுப்பிக்கப்பட்டு ஆடி மாதம் 18ந் திகதி புதன்கிழமை [3-8-55] விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. மாலையில் கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றது. சாதிசமய வேறுபாடின்றி புறநாட்டினரும் உள்நாட்டினரும் வழிபாட்டில் கலந்துகொண்டமை மனத்தை உருக்குந் தன்மையதாயிருந்தது.

வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் விசேஷ பூசையும் கூட்டுவழிபாடும் நடைபெறும்.

## நாமலிகித ஜெபயாகம்

10-7 55 வரை ஆனந்தாச்சிரமத்துக்கு அனுப்பப்பட்ட கொப்பிகளின் படிக்கு 238.700.333 நாமங்கள் எழுதப்பட்டுள்ளன. பங்குபற்றும் அன்பர்களின் தொகை 5055.

## தமிழ் மறைக் கழகத்தாரின்

### அகில இலங்கைத் திருக்குறள் மனனப்போட்டி

இலங்கை முழுவதிலுமுள்ளவர்கள் பங்குபற்றத் தக்கதாகத் திருக்குறள் மனனப் போட்டி ஒன்றை நடத்துதற்குத் தமிழ்மறைக் கழகம் முடிவு செய்துள்ளது. கீழ்ப்பிரிவு. மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாகப் போட்டி நடாத்தப்படும். 1-1-42க்குப் பின் பிறந்தவர்களே கீழ்ப் பிரிவுப் போட்டியிலும், 1-1-35க்குப்பின்



பிறந்தவர்களே மத்திய பிரிவுப் போட்டியிலும் பங்குபற்றலாம். மேற்பிரிவுக்கு வயதுக் கட்டுப்பாடில்லை.

கீழ்ப்பிரிவுக்கு அறத்துப்பாலும். மத்திய பிரிவுக்கு அறத்துப்பாலும் பொருட்பாலும் மேற்பிரிவுக்குத் திருக்குறள் முழுவதும் போட்டிக்குரிய பகுதிகளாகும்,

1956-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17-ஆம் நாள் சனிக்கிழமை தேர்வொன்று நடத்திப் போட்டியில் முதல் மூன்றிடத்தைப் பெறுபவர்களுக்குப் பரிசில்களும் 50 சதவீதத்துக்குக் குறையாமற் புள்ளி பெறுபவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும். வினாப் பத்திரத்துக்கு விடை எழுத ஒரு மணித்தியாலம் கொடுக்கப்படும். பிழையின்றிச் சிறப்பாக எழுதுதல் வேண்டும். 75 சதவீதப் புள்ளி பெறுதவர்கள் பரிசில் பெறத் தகுதி உடையவர்களாகார்,

பெறுமதி

| | கீ. பிரிவு | ம. பிரிவு | மே. பிரிவு |
|---|---|---|---|
| 1-ஆம் பரிசில் தங்கப் பதக்கம் | 75 ரூ. | 100 ரூ. | 125 ரூ. |
| 2-ஆம் பரிசில் தங்கப் பதக்கம் | 50 ரூ. | 60 ரூ. | 75 ரூ. |
| 3-ஆம் பரிசில் வெள். பதக்கம் | 25 ரூ. | 30 ரூ. | 40 ரூ. |

ஒவ்வொரு பிரிவிலும் முதலாவதாகத் தேறும் பெண்களுக்கு 50 ரூபா பெறுமதியான தங்கப் பதக்கம் வழங்கப்படும். முப்பிரிவுகளிலும் முதலிரண்டு பரிசில்களில் எவற்றையேனும் பெறும் பெண்கள் இப்பரிசிலுக்கு உரிமையுடையவராகார். கீழ்ப் பிரிவுப் போட்டியிற் பங்குபற்றுபவர்களுள் மிகக் குறைந்த வயதுடையவருக்கும் ஒரு விசேட பரிசில் வழங்கப்படும், போட்டி பற்றித் தமிழ் மறைக் கழக ஆட்சி மன்றஞ் செய்யும் முடிபுகளே, இறுதியானவை, பரிசில்கள் யாவும் 1955-ஆம் ஆண்டின் திருவள்ளுவர் திருநாளாகிய மே மாதம் 24-ஆம் நாளன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தமிழ் மறைக் கழகத்தின் நான்காவது திருக்குறள் மகாநாட்டில் வழங்கப்படும்.

தேர்வு நடைபெறும் இடங்கள்: அளவெட்டி, அனுராசபுரம் இரத்தினபுரி, கண்டி, காலி, கொழும்பு, சாவகச்சேரி, சுளிபுரம், திருகோணமலை, நாவலப்பிட்டி, நீர்வேலி, பரந்தன், மட்டக்களப்பு, மாத்தளை, யாழ்ப்பாணம், வதுளை, வவுனியா, வேலணை.

போட்டிகளிற் பங்குபற்ற விரும்புவோர் கீழேயுள்ள சேர்வுத் தாளை நிரப்பி 50 சதத்துக்கோர் அஞ்சற் கட்டளை [போஸ்ரல்ஓடர்] யும் சேர்த்து 1-11-55க்கு முன் *செயலாளர், தமிழ் மறைக் கழகம், 44, 33-ஆம் ஒழுங்கை, கொழும்பு—6* எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

*இ. சி. சோதிநாதன்,*
செயலாளர் த. ம. கழகம்.

---

## அகில இலங்கைத் திருக்குறள் மனனப்போட்டி

### சேர்வுத் தாள்

பெயர் :

தந்தையார் பெயர் :

ஆண் பெண் :

முகவரி :

பிறந்த தேதி :

தேர்வுக்குத் தோற்ற விரும்பும் இடம் :

அஞ்சற் கட்டளை இல :

போட்டி விதிகளுக்கு அமைந்து நடந்துகொள்வேன்.

திகதி : கையொப்பம் :

இங்கு கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன்.

கையொப்பம் :

முகவரி :

[தமிழ் மறைக் கழகத்தின் உறுப்பினர் ஒருவர் அன்றேல் தலைமை ஆசிரியர் ஒருவர் கையெழுத்திடல் வேண்டும்.] திகதி :

# BIRTHDAY MESSAGE

## UNTO LIFE DIVINE

**(SRI SWAMI SIVANANDA)**

Beloved Manifestation of Divinity !

God is everywhere, God dwells in the inmost core of your being, of every being. God is the Reality of your existence. To that God I bow in utmost reverence and humility. May He bless you all with a devout heart, silent intellect, tranquil mind and controlled senses! May you thus shine as an illumined soul, full of Brahmic splendour!

A faithful heart endowed with humility and discrimination will perceive the glory of God immanent in every ... He alone is. All else appear to be. The appearance is Maya. The Reality is God.

... refreshing c... fragrance in flowers, the ma... the Vitamins in foodstuffs, are all Hi... tions. He is the Supreme Power that has c... maintaining this universe. That Power is Love.

Love unites all, and takes you nearer Godhead ... is One Supreme Unit. In Unity lies not only strength, but peace and bliss. Whereever this unity, this love, is practised know that God is specially manifest there.

May you all shine as saints, Yogis, sages and Jivanmuktas ! May there be peace in the world and love in the heart of man ! May His Divine Power triumph in this universe, now and for ever ! May God bless you all with health, long life, peace, prosperity and Eternal Bliss ! Om Shantih, Shantih, Shantih.

(Condensed)

NOTE:-

*The 69th Birthday of His Holiness will be celebrated in various parts of the world on 8th September 1955.*

Regd. at the G. P. O, as News Paper, H, C 59-500

## ஆத்மஜோதி ஆயுள்சந்தா ஆதரவாளர்கள்

திரு. ச. சதாசிவம், இம்புல்பிட்டி, நாவலப்பிட்டி

திரு. V. செல்வத்துரை, P.W.D. ஓவசியர், கண்டி.

---

## சந்தா நேயர்களுக்கு

அடுத்த மாதந்தொடக்கம் ஆத்மஜோதி எட்டாவது ஆண்டுச் சந்தா ஏற்றுக்கொள்ளப்படும். 15-10-55 தேதியோடு ஆத்மஜோதி ஏழாவது ஆண்டு நிறைவேறுவதால் சந்தா அன்பர்கள் யாவரும் தங்கள் சந்தாப் பணங்களை 1-11-55க்குள் அனுப்பிவைத்தால் காரியாலய நிர்வாகந் தக்து [illegible] வளர்ச்சிக்கும் உதவியாக இருக்கும் என்பதை [illegible] அறியத்தருகின்றோம்.

ஆத்மஜோதி [illegible], நாவலப்பிட்டி. (சிலோன்)

---

## திருவாசகம்

[illegible]

இருக்கவேண்டிய நூல்.

15-00 தபாற்செலவு பிரத்தியேகம்

*[illegible] ஆத்மஜோதி நிலயத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.*

---

## [illegible] துறவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும்

இயற்றியவர்: திருப்பெருந்திரு திருவருள் தவயோக சோமசுந்தரதேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

[illegible] விலை ரூபா ஒன்றரை

*கிடைக்குமிடங்கள்:*

[illegible] நாம்ஸ் லிமிட்டெட்,
குறுக்குத் தெரு,
கொழும்பு 12.

திருவருள் தவநெறி மன்றம்,
70, தெற்கு ஆவணி மூல வீதி,
மதுரை, தென் இந்தியா.

Hony. Editor, K. Ramachandran, 60. Deal Place, Colpetty
Printed & Published by N. Muthiah, Athmajothi Nilayam, Nawalapitiya
At Saravana Press, Nawalapitiya 17-8-55